ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. சுக்கிலஹு ஆனிமீ பகுதி ௬.
Vol 6. *June & July 1929.* No. 6.

திருவள்ளுவர் சமயம்.

உலகத்தில் எவரேனும் ஒருவர் புலமையிற் சிறந்து புகழ் பெற்றவராய் விளங்குவரேல் அவரைத் தத்தம் சமயச்சார்பினராகச் சொல்லிக்கொள்வது சிலர் வழக்காக விருக்கக்காண்கிறோம். அம் முறைபற்றி ஈண்டுத்திருவள்ளுவரை நம் சமயச்சார்பினராகச் சொல்லமுற்பட்டதாகக்கருதலாகாது. திருவள்ளுவர் எச்சமயச் சார்பினராயிருத்தல்வேண்டும்? என்பதை அவர் வாய்மொழியான் நன்காராய்ந்து நடுநிலைமையுடன் அவரது சமயம் ஈண்டு நிரூபித்துரைக்கப் பெறும்.

ஒருவரது சமயம் இன்னதென்று ஆராய்வதற்குப் பலவழிகளுண்டு. அவற்றுள் சிறந்த புருஷார்த்தமாகிய மோக்ஷவிஷயத்தில் அவரது தாற்பர்ய நிச்சயம் இன்னதென்பதைத் தெரிந்துகொள்வதே முக்யமாகும். பிருதிவி முதலிய நான்கு பூதங்களின் கூட்டுரவாலே சைதன்ய மென்றொரு தர்மம் பிறக்கும்; அதுக்குண்டான ஸுக துக்கங்களே ஸ்வர்க்க நரகங்கள்; அவற்றினுடைய பிரிவிலே சைதந்யம் நசிக்கும். இதன்மேலொன்றுமில்லை என்பரேல் அவர் நாஸ்திகவாதியரென்றும், விதிவிலக்கில்லாத ஸ்வந்திரத்தன்மை யாதோ அதுவே மோக்ஷம் என்பரேல் அவர் தேகாத்மவாதியரென்றும், முக்குணவடிவாயும், பரிணாமியாயுமிருப்பது மூலப்பிரகிருதி; ஒன்றனிடத்திற் பிறவாததாயும் தானொன்றைப் பிறப்பிக்காததாயு மிருப்பது ஆத்மா; இவ்விரண்டின் விவேகத்தால் புருஷனது அநாதி

அவிவேகம் நிவர்த்தியாய்விடுகிறது; இதுவே மோக்ஷம் என்பரேல் அவர் சாங்கியரென்றும், அக்னிஹோத்ரம் முதலிய தர்மங்களால் ஸ்வர்க்கத்தின் பிராப்தி (அடைதல்) யாதோ அதுவே முக்தியாம்; என்பரேல் அவர் மீமாம்சகரென்றும், § பரா என்றவாக்கு யாதோ அது பிர்ம்மவடிவமாம்; இந்தப் பிர்ம்மவடிவ பராவாணியின் தரிசனம் யாதோ அதுவே மோக்ஷம் என்பரேல் இவர் வையாகரணர் என்றும், 'தத்வமஸி' முதலிய வாக்யத்தாலுண்டாகும் ஜ்ஞானத்தினுல் மயக்கவுணர்ச்சியொழிதலே மோக்ஷமென்பரேல் அவர் அத்வைதிகரென்றும் தெளிவாகக்கொள்ளலாம். அதுபோல் திருவள்ளுவருடைய சமயத்தை ஆராய்வதற்கும் மோக்ஷ விஷயத்தில் அவரது நிச்சயம் யாதென்று முன்னர் அறிதல்வேண்டும்.

இவரும் மனு முதலானவர்கள் போன்ற நீதி நூலாசிரியராதலால் இவர் மோக்ஷத்தைக்குறித்து உதாரணவாயிலாகவாவது பயனுரைக்கு முகத்தினுலாவது பிறவாற்ருனுவது கூறியிருத்தல் வேண்டும். இங்ஙனம் கூறியிருப்பதை வைதிகவாக்யங்களின் தாத்பர்யலிங்கங்களால் பரிசோதிப்பது இன்றியமையாததாகும்.

வைதிகவாக்யங்களின் தாத்பர்யலிங்கங்களாவன:— ஆரம்ப முடிவுகளின் ஒருவடிவாம் தன்மை, † அப்யாஸம், % அபூர்வதை, பலம், * அர்த்தவாதம், ¶ உபபத்தி என்று சொல்லப்படுகிற இவை ஆறுமாம். புகையால் அக்கினியறியப்படுதலால் புகை அக்கினியின் லிங்கமெனப்படுவதுபோல இவற்ருல் வைதிகவாக்யங்களின் தாத்பர்யமறியப்படுதலால் இவை தாத்பர்யத்தின் லிங்கமெனப்படுகின்றன. இந்த லிங்களாலன்றிப் பிறவாற்ருன் திருவள்ளுவரின் சமய உண்மை தெள்ளிதின் அறிதற்கியலாதாதலால் இனி இவற்

§ பரா—நாபியின்றெழும் ஸூக்ஷ்ம வடிவ ஒலி.

† அப்யாஸம்—அடிக்கடி சொல்லுதல்.

% அபூர்வதை—வேதமொழிய வேறு பிரமாணங்களால் அறியப்படாத தன்மை.

* அர்த்தவாதம்—ஸ்துதியை அல்லது நிந்தையை யறிவிக்கும் வாக்யம்.

¶ உபபத்தி—சொல்லப்பட்ட பொருளிற்கு அநுகூலமான யுக்தி.

றைப் பற்றுக்கோடாகக்கொண்டே அவரது சமய உண்மை ஆராயப்படுகிறது.

கடவுள் வாழ்த்ததிகாரத்தில் "மலர்மிசை யேகினான்மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடு வாழ்வார்" என்றார். இங்கு மோக்ஷத்தை எல்லா உலகிற்கும் மேலாகிய அழிவின்றியிருப்பதோர் தேசவிசேஷமாகக்கொண்டுள்ளார். மேலும், ஈண்டு இறைவனையும், அவனடி வாழ்த்துபவனையும், வாழ்த்துமவன் வாழ்தற்கிடமாகிய வீட்டுலகத்தையும் குறிப்பிட்டு விளக்கியதனால் சித்சித்ஈசுவர தத்வ த்ரயத்தின் உண்மைபெறப்பட்டது. இந்தத் தத்வத்ரயங்களுள் வாழ்த்தப்படுவனாகிய இறைவன் உயர்ந்தவனென்பதும், அவனடி வாழ்த்துபவனாகிய ஜீவனும் அசித்தும் அவனிற்றாழ்ந்தனவாயும் அவனுக்கு விதேயங்களாயும் (சொற்படி நடப்பனவாயும்) இருக்குமென்பதும் விளங்குகின்றன. இன்னும் 'மலர்மிசைஏகினான்' என்றதனால் இறைவன் அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தில் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேர்கின்றவனென்பதும், அதனால் அவன் பத்துடையடியவர்க் கெளியவனென்பதும், மாட்சிமைப்பட்டவடியையுடையவன் என்றதனால் இறைவன் திவ்யமங்களவிக்ரஹத்தோடு கூடியவனென்பதும் அறியக்கிடக்கின்றன. ஆக இந்தக்குறளினால் அவனடிவாழ்த்துகின்றவர்கள் அழிவின்றி வீட்டுலகில் அவனோடு கூடி இன்புறுவரென்று வாழ்த்துவார்க்குப் பலனுரைக்கப்பட்டது.

இறுதிப்பாலாகிய காமத்துப்பாலில் "தாம்வீழ்வார்மென்றோட்டுயிலினினிதுகொல், தாமரைக்கண்ணானுலகு" என்றார். இங்கு நிரதிசய இன்பத்தைப்பெற்றநுபவித்தற்குரியனாகிய நீ இச்சிற்றின்ப விஷயத்தில் மிகவும் காதலுற்றிருப்பது தகாதென்ற பாங்கனை நோக்கித் தலைவன் கூறியது. இதன்பொருளாவது ஐம்புலன்களை அநுபவிப்பார்க்குத் தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோளின்கட்டுயிலும் துயில்போல வருந்தாமலடையலாமோ, அவற்றைத்துறந்த தவயோகிகளடையும் செங்கண்மாலுலகம்? என்பதாம். கடவுள் வாழ்த்ததிகாரத்தில் வீட்டுலகத்தை இறைவனுடைய திருவடியை அடைந்தவர்கட்குப் பிரயோஜனமாகக் கூறினர். ஈண்டும் நிரதிசயவின்பமுடையதாய்ப் பரமப்பிரயோஜனமாக விருக்கும்

வீட்டுலகம் ஐம்புலனுகர்ச்சியைவிட்ட பரமயோகியரால் அடையத் தக்கதென்று பயனுரைக்குமுகத்தாற் கூறினர். இதனால் ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்திற் கூறப்பட்டதற்கும், இறுதிப்பாலாகிய காமத்துப்பாலிலுள்ள இக்குறளிற்கும் பொருளொற்றுமை காணின்றேமாதலால் ஆரம்பமுடிவுகள் ஒருவடிவாம்தன்மையாகிய தாத்பர்யத்தின் லிங்கமறியலாகும். இன்னும் ஆரம்பத்தில் எல்லாவுலகிற்கும் மேலாகிய வீட்டுலகத்தைச் செங்கண்மாலுலகத்தோடு அபேதப்படுத்தித் தெளிவித்தார். இதனால் செங்கண்மாலுலகமே மோக்ஷமென்பது திருவள்ளுவரின் தாத்பர்யமென்று விளங்குகிறது. இன்னும் இதற்குப் பலசான்றுகளுள. அவை வருமாறு:—

"அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன் முதற்றே வுலகு" என்ற முதற்குறளானது திருவஷ்டாக்ஷர மந்திரத்தின் பொருளை விவரிக்கிறது. எவ்வாறெனின்; அஷ்டாக்ஷரத்தில் ப்ரணவத்திலுள்ள அகாரம், உகாரம், மகாரம் என்ற அக்ஷரார்த்தங்களை முறையே நாராயணபதமும், நமப்பதமும், சதுர்த்தியும் (நான்காம் வேற்றுமையும்) விவரிக்கின்றனபோல ஈண்டும் அகாரத்தின் அர்த்தத்தை 'ஆதி பகவன்' என்ற சொல்லும், உகாரத்தின் அர்த்தத்தை 'முதற்றே' என்ற சொல்லும், மகாரத்தின் அர்த்தத்தை 'உலகு' என்ற சொல்லும் விவரிக்கின்றன. எவ்வாறெனின்; அகாரத்தால் கல்யாணகுணங்களோடு கூடிய இறைவன் குறிப்பிடப்படுகிறான் என்று ஆன்றோர்கள் நிரூபித்துள்ளார்கள். அதற்கேற்ப இக்குக்குணவிசிஷ்டனான இறைவன் என்பார் 'ஆதி * பகவன்' என்றார். பகவச்சப்தமும் திருமாலையே குறிப்பிடும் என்பதற்குப் பலசான்றுகளுள. அவற்றுள் கிருஷ்ணன் அருளிய கீதைக்குப் பகவத்கீதை என்று வழங்கியதே போதியசான்றாகும். உகாரத்திற்கு ஏகாரமே பொருளாதலால் 'முதற்றே' என்றார். மகாரம் ஜ்ஞானஸ்வரூபனான ஆத்மாவைக்குறிப்பிடுமென்பதை † 'உலகு' என்றார். இன்னும்

---

* ஜ்ஞானம், சக்தி, பலம், ஐசுவர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறு குணங்கட்குப் பகம் என்று பெயர். இவற்றையுடையோன் பகவன்.

† 'உலகென்றது ஈண்டுயிர்கண்மேனின்றது.' என்று பரிமேலழகர் உரையாலுமறியலாம்.

'ஆதிபகவன் முதற்றே' என்றதனால் இறைவனுக்கும், ஜீவனுக்கும் ஸேவ்யஸேவகபாவ சம்பந்தமுண்டென்பது பெறப்பட்டது. இதனால் இறைவனுக்குச் சேஷித்வமும் (தலைவனாயிருக்கும் தன்மையும்) ஜீவனுக்குச் சேஷத்வமும் இன்றியமையாத லக்ஷணங்களாகுமென்பதுபோதரும். ஜீவனுக்குச் சேஷத்வமே முக்யமான ஸ்வரூபமாகில் இந்த சேஷத்வஸித்திநிமித்தமாக அவன் விஷயமான பணிவிடைகளைச் செய்தல்வேண்டும். செய்யாதொழியின் சேஷத்வம் ஸித்தியாது. அவன் விஷயமான பணிவிடைகளாவன அவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலுமாம். இவற்றையே ஏனைய ஒன்பது குறளும் வெளியிடுகின்றமையால் இவை இந்த முதற்குறளினுடைய விவரணமாயிருக்குமென்றறியத்தக்கது. இந்த முதற்குறளும் அஷ்டாக்ஷர விவரணமாயிருப்பதோடு பகவச்சப்தத்தை முன்னிட்டுக் கூறுவதாலும் திருமாலையே உணர்த்திற்றென்பது தெளிவு. ஏனைய ஒன்பது குறள்களும் இதன் விவரணமெனவே அவையும் இவனையே உணர்த்துமென்பது சொல்லாமலே பெறப்படும்.

இதுநிற்க; அடியார்கள் இழியுந்துறை இறைவனுடைய திருவடியேயாகுமென்பது திருமால்சமயச் சார்பினர்களின் முக்ய கொள்கையாம். இக்கொள்கையை இந்தக் கடவுள் வாழ்த்ததிகாரத்தில் "வாலறிவன் நற்றாள்" என்றும், "மாணடிசேர்ந்தார்" என்றும், "வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கு" என்றும், "தனக்குவமையில்லாதான்றாள்சேர்ந்தார்க்கு" என்றும், "அறவாழியந்தணன்றாள்சேர்ந்தார்க்கு" என்றும், "எண் குணத்தான்றாளை" என்றும், "இறைவனடிசேர்ந்தார்" என்றும் எழு முறை கூறிவற்புறுத்தினர். இவ்வாறு கூறியதனால் இக்கொள்கை திருவள்ளுவருக்குப் பூர்ண சம்மதமென்பது அறியக்கிடக்கிறது. எஞ்சாப்பொருளைச் சிற்சிலவிடங்களில் எழுமை என்ற சொல்லால் வழங்குவது பண்டையோர்களின் இயல்பு. "எழுமையுமேமாப்புடைத்து"என்பது முதலிய பிரமாணங்களாலறியலாம். "முடியநிற்குமவற்றை எவ்வேழாகச் சொல்லக்கடவதிறே" என்று நம்பிள்ளை ஈட்டிலும் காணலாம்.

இந்தக் கடவுள் வாழ்த்ததிகாரத்தில் திருமாலைச் சுட்டியுணர்த்துவதோர் பெயரில்லாததினால் இவ்வாழ்த்துத் திருமாலைப்பற்றியதா

மென்பது பொருந்தாதென்று வாதிப்பாரின் வாதத்தை அகற்ற "பொறிவாயிலைந்தவித்தான்" என்றார். பொறிவாயிலைந்தவித்தான் என்று திருமாலுக்கோர் பெயருண்டு. இதை அமரசிம்மனுரைத்த அமரகோசத்தில் விஷ்ணுவின் பெயர் கூறிவருகிறவிடத்தில் "சுயொக்ஷஜஃ" "அதோக்ஷஜஃ" என்றதனால் அறியலாம். அதோக்ஷஜன், இந்திரியங்களையடக்கியவன், பொறிவாயிலைந்தவித்தான் என்பன ஒருபொருளையுணர்த்துஞ் சொற்கள். இந்த அதோக்ஷஜன் என்ற பெயர் விஷ்ணுவுக்குக் காரணவிடுகுறியாற் பெற்றதாம்.

மேலும், "பொறிவாயிலைந்தவித்தான்" என்ற திருக்குறள் கடவுள் வாழ்த்ததிகாரத்தில் ஆறுவது திருக்குறளாக வுரைக்கப் பட்டுளது. இதற்கு முன்னுள்ள ஏனைய ஐந்து குறள்களையும் இந்தப் பொறிவாயிலைந்தவித்தான் என்ற பெயர்க்காரணத்திற்குப் பொருத்தமாகவே அமைத்துள்ளார். எவ்வாறெனின்; முதற்குறளினால் இறைவன் உலகிற்குத் தலைவனாகவிருக்கிறானென்று அவனது உண்மையுரைக்கப்பட்டுளது. இரண்டாவது குறளினால் இங்ஙன முலகிற்குத் தலைவனாய் விளங்குகிற இறைவன் திருவடியை வணங்குவதே நூலறிவிற்குப் பிரயோஜனமாகுமென்றுங் கூறினர். மூன்றாவது குறளினால் நூலறிவிற்கு அவனை வாழ்த்துவதே பிரயோஜனமென்னில்; உலகிற்குத் தலைவனாகிய அறப்பெரியான் வணங்குதற் கெளியனாவனோவென்றையம்நிகழ அதையகற்ற அவன் அன்பானினைவாரது உள்ளக்கமலத்தில் அவர் நினைந்த வடிவோடு விரைந்து செல்பவனுவான் என்று அவனது எளிமை கூறினர். நான்காவது குறளினால் அன்பரது உள்ளத்தில் வசிக்கின்றவன் ஏதேனும் விருப்புடையவனாயிருப்பனோவென்று கருதவேண்டா; அவன் விருப்பு வெறுப்பற்றவனென்றார். ஐந்தாவது குறளினால் விருப்பு வெறுப்பில்லாமைக்குக் காரணமாகிய புண்யபாபரூபமான இருவினைத்தொடர்பு அவனுக்கில்லை என்றார். ஆறுவது குறளினால் இந்த வினைத்தொடர்புகள் அவனைப்பற்றாமைக்குக் காரணமாயிருக்கின்ற இந்திரிய நிக்ரஹத்தைக்கூறினர். இதனால் பொறிவாயிலைந்தவித்தான் என்ற பெயர்க்குரியனாகிய திருமாலே இருவினைத்தொடர்பற்றவனாகவும், விருப்பு வெறுப்பில்லாதவனாகவும், அன்பர்களுடைய உள்ளக்கமலத்தில்

வீற்றிருக்கும் எளிமைக்குணமுடையவனாகவுமிருப்பான். இத்தகைமையுடையவனை வாழ்த்துவதுதான் நூலறிவுக்குப் பிரயோஜனம். இவனே உலகிற்குத்தலைவனுவானென்பது தெற்றெனப் புலனாகிறது.

இன்னும் ஓர் ரத்னமாலைக்கு நாயகரத்னமானது எவ்வாறு விளங்குமோ அதுபோல "பொறிவாயிலைந்தவித்தான்" என்ற திருக்குறளை இடையிற்பெய்து விளங்கவைத்ததும் போற்றத்தக்கதே. இதன் பின்னுள்ள நான்கு குறள்களும் இவ்வர்த்தத்தையே விவரிக்கின்றன. எவ்வாறெனின்; பொறிவாயிலைந்தவித்தானாகிய திருமாலே இருவினைத்தொடர்புகளற்று நிரபேக்ஷனாய் விளங்கும் பெருமையுடையவனாதலால் இவனே ஒருவாற்றானும் தனக்கு நிகரற்றவனாவான் என்பதை ஏழாவது குறளினால் விளக்கினார். இவனே தர்மஸ்வரூபியாவானென்பதை எட்டாவது குறளினால் தெரிவித்தார். குணவிசிஷ்டனான இறைவனென்று முதற் குறளினாற் பெறப்பட்டதை வற்புறுத்துவதோடு ஆகமவறிவிற்குப்பயன் அவன்றாளை வணங்குவதேயாமென்று இரண்டாவது குறளினாற் பெறப்பட்டதையும் ஒன்பதாவது குறளினால் வற்புறுத்தினார். அவன்றாளை வணங்கினார் உய்வர்; வணங்காதார் உய்யாரென்று முன்பெறப்பட்ட விஷயத்தைப் பத்தாவது குறளினாற் உடன்பாட்டானும் எதிர்மறையானுமுரைத்து வலியுறுத்தினார். ஆக எவ்வகையான் ஆராயினும் இவ்வாழ்த்து, திருமாலைப்பற்றியதாமென்று எவரும் நிராக்ஷேபமாக ஒப்புக்கொள்ளுதற்குக் கடமைப்பட்டவராவார்.

இங்ஙனமாகில் ஆசிரியர் பரிமேலழகர் இந்தக் கடவுள் வாழ்த்து மூவருக்கும் பொதுப்படக் கூறியதாகுமென்றுரைத்தது பொருந்துமா றெங்ஙனமென்னில்; பரிமேலழகர் உரையை நுண்ணிதின் ஆராயவே இவ்வாழ்த்து முழுமுதற்கடவுள் ஒருவனுக்கே முக்ய உரிமையுடையதாமென் றறியக்கிடக்கிறதினால் பொருந்துமென்க. இவர் கருத்து இவ்வாறுமென்பதை நிரூபிப்பதற்கு ஈண்டு இவருரையை எடுத்துக்காட்டி அதன்பொருளும் விவரிக்கப்படும். இவருரை வருமாறு:—

"கடவுள் வாழ்த்து அஃதாவது கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல்

வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளையென வறிக. என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண் டாகலான். அம்மூன்று பொருளையும் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமை யாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரெனவுணர்க" என்பதாம். சத்துவ முதலிய குணங்களான் என்பது முதலிய சொற்றொடர்கள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளைப்பற்றியதாமென்பதை நிரூபிக்கின்றன. சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருள் என்றது சத்துவ ரஜோ தமோ குணங்களாலாகிய அறம் பொருள் இன்பம் என்ற பிராப்யப்பொருள் (அடைதற்குரிய பொருள்) என்றவாறு. அவற்றான் மூவர் என்றது அக்குணங்களால் வேறுபட்ட மூவரென்ற வாறு. இதனால் சத்துவகுணக்கடவுள் அறத்திற்குரியதென்றும், ரஜோகுணக்கடவுள் பொருளிற்குரியதென்றும், தமோகுணக்கட வுள் இன்பத்திற்குரியதென்றும் கொள்ளத்தக்கது. ஆகவே அறம் பொருள் இன்பம் என்ற இம்மூன்று பொருள்கட்கும் இக்கடவுள ரோடியைபுண்டென்பது பெறப்படும். மூவராகிய முதற்கடவுள் என்றது மூவர்க்கும் காரணமாகிய முதற்கடவுள் என்றவாறு. மூவராவார் பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரரென்பார். இவர்களுள் சத்துவகுணமுடைய விஷ்ணுவே காரணப்பொருளான முதற்கடவு ளாம். இவனே முதற்கடவுளாகில் இவன் பிர்ம்மா, ருத்திரர்கட்குக் காரணமாயிருத்தல் கூடும். இங்கு மூவருக்குங் காரணமாயிருக் கின்றானென்று தன்னையுஞ் சேர்த்துக்கூறுதல் பொருந்துமோவென் னில்; முழுமுதற்கடவுளாகிய இவனுக்கு மிக்கார் ஒருவருமில்லை யாதலால் இவன் தனக்குத்தானே காரணமாயிருக்கிறானென்பது பொருத்தமுடையதேயாம். "வதிம் விஶ்வஸ்ய ஆத்மேஶ்வரம்" "பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம்" (உலகிற்குப் பதியாயும் தனக்குத்தானே ஈசுவரனாயுமிருக்கின்றான்) என்ற ப்ரமாணமும் இதை வலியுறுத்தும்.

இன்னும் மூவராகிய முதற்கடவுள் என்பதின் பொருளை ஆராய்ந்தால் விஷ்ணுவாகிய முதற்கடவுள், பிர்ம்மாவாகிய முதற் கடவுள், ருத்திரனாகிய முதற்கடவுள் என்று வெளியாகிறது. இங்கு

விஷ்ணுவாகிய முதற்கடவுள் என்பதில் விவாதமில்லை. மற்றவிரண்டு பொருள்களில் விவாதமுண்டு. எவ்வாறெனின்; பிர்ம்மாவாகிய முதற்கடவுள் என்பதில் பிர்ம்மாவுக்கும் முதற்கடவுளுக்கும் ஸ்வரூப ஐக்யஞ்சொல்லியதுபோல் ஏற்படுகிறது. அவ்வாறே ருத்திரனாகிய முதற்கடவுள் என்பதற்கும் கொள்ளக்கிடக்கிறது. இங்கு இவ்வாறு பொருள் கொள்ளலாகாது. பிர்ம்மாவாகிய முதற்கடவுள் என்பதில் பிர்ம்மா, முதற்கடவுள் என்ற இருவருக்கும் பிரகார, பிரகாரித் தன்மையால் (விசேஷண விசேஷ்யத்தன்மையால்) ஏற்படும் ஒற்றுமையேயுள்ளது. இருவருக்கும் ஸ்வரூபஐக்யமில்லை. இப்பொருள் *ஸாமாநாதிகரண்ய நியாயத்தால் பெற்றதாகும்.

மேலும், சத்துவகுணத்தாலாகிய அறமும் விதிவிலக்குகளோடு செய்கிற பொருளின்பங்களில் வியாபித்திருப்பதுபோல சத்துவ குணப்பிரதானனான திருமாலும் மற்ற ரஜோகுண தமோகுணங்களையுடைய கடவுளரிடத்தில் வியாபித்துள்ளானென்பது போதரும்

---

* ஸாமாநாதிகரண்யமாவது ஸமாநமான அதிகரணத்தை (இடத்தை) உடைத்தாயிருக்குந்தன்மை. அஃதாவது வெவ்வேறு பொருளுள்ள சொற்கள் ஒரே பொருளை யுணர்த்திநின்றால் அவை ஸமாநமான அதிகரணத்தை யுடையனவாம் என்பதாம். இவ்வாறன்றி விசேஷணத்தால் பலபொருண்மையும், விசேஷ்யத்தால் ஒரு பொருண்மையும் ஏற்படுங்காலத்து ஸாமாநாதிகரண்யமுண்டென்றுங் கொள்ளலாம். நீலவர்ணமாயும் வளைவாயும் பெரிதாயுமுள்ள குடம் என்ற இந்த உதாரணத்தில் நீலம் வளைவு பெருமை என்ற பண்புகளை விசேஷணமாகவுடைய குடம் என்று உணர்த்துவதுபோல இங்குப் பிர்ம்ம ருத்திரர்களை விசேஷணமாகவுடைய முழுமுதற் கடவுளென்று பொருள் கொள்ளத்தக்கது. இஃதன்றி உலகில் காணப்படும் பொருள்களெல்லாம் ஜீவாத்மாக்களுக்குச் சரீரங்கள். இவையெல்லாம் ஜீவன் வழியாகப் பரமாத்மாவுக்குச் சரீரங்களாகும். தேவமனுஷ்யாதி சரீரங்களெல்லாம் அவ்வச்சரீரத்திற்கு அதிஷ்டாதாவான ஆத்மாவைக்குறித்துக்கொண்டு அதன் வழியாக அந்த வாத்மாவுக்கும் ஆத்மாவாகவிருக்கும் பரமாத்மாவைக் குறிக்குமென்பதோர் நியமமுண்டென்று கொள்வதுண்டு. அம்முறைப்பற்றியும் பிர்ம்ம ருத்திராதி சப்தங்கள் பரமாத்மாவை யுணர்த்துமென்றறியத் தக்கது.

இன்னும் பொருளின்பங்கட்கு அறமும், ரஜோகுண தமோகுணங்கட்குச் சத்துவமும் தலைமைவாய்ந்திருப்பனபோல ஏனைய கடவுளரிருவருக்கும் இந்தச் சத்துவகுணப் பிரதானனன் கடவுளே தலைமைவாய்ந்துள்ளவனென்பதும் தெளிவாம். இங்ஙனம் தலைமை வாய்ந்துள்ள இவனுடைய அநுப்பிரவேசசக்தியால் மற்ற விருவருக்கும் தலைமையுண்டு. இம்முறைபற்றி இவ்வாழ்த்து மூவருக்கும் பொதுப்படக்கூறியதாகுமென்றாரேனும் திருமாலுக்கே முக்ய உரிமையுண்டென்பது ஆசிரியர் பரிமேலழகருக் குடன்பாடாம். இன்னும் முதற்குறளின் உரைமுடிவில் "இதனல் முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது" என்றார். இங்கு முதற்கடவுள் என்று ஒருமையாற் கூறியதினுலும், இறைமாட்சியில் ஏனைய தேவதைகளிடத்திலும் அநுப்பிரவேசித்துக் காரியஞ்செய்ய வல்லவன் திருமாலே என்று கொண்டதினுலும் இவ்வாசிரியருக்கும் திருமாலே முழுமுதற் கடவுளாமென்பது துணிபு. "இன்னும் இதற்குப் பல சான்றுகளுள" என்று தொடங்கி இதுவரையிலு முரைத்ததினல் திருவள்ளுவர் திருமாலுலகத்தையே மோக்ஷமாகக் கொண்டுள்ளாரென்பதற்கு உபபத்தியென்னும் தாத்பர்யலிங்கம் பெறப்பட்டது.

இனி, அப்யாஸம் என்னும் தாத்பர்யலிங்க முரைக்கப்பெறும்.— திருவள்ளுவர் மோக்ஷத்தை எல்லாவுலகிற்கும் சிறந்த தேச விசேஷமாகக்கொண்ட கொள்கையைப் பலவிடங்களிலும் நிறுவுகிறார்.— நீத்தார்பெருமை என்ற அதிகாரத்தில் "வரனென்னும் வைப்புக் கோர்வித்து" என்றும், அருளுடைமை என்ற அதிகாரத்தில் "அருளில்லார்க் கவ்வுலகமில்லை" என்றும், ஈகை என்ற அதிகாரத்தில் 'மேலுலகமில்லெனினுமீதலே நன்று" என்றும், நிலையாமை என்ற அதிகாரத்தில் "புக்கிலமைந்தின்றுகொல்லோ" என்றும், துறவு என்ற அதிகாரத்தில் "வானோர்க்குயர்ந்தவுலகம்புகும்" என்றும், மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் "வானநணியதுடைத்து" என்றும், அவாவறுத்தல் என்ற அதிகாரத்தில் "பேராவியற்கை தரும்" என்றும் உரைத்தார்.

திருமால் சமயத்தினர் ஜீவன் அவா முதலிய பற்றற்று அதனால் பாபம் நீங்கப்பெற்று முக்தானும் நிலையெய்தி அர்ச்சராதி புருஷர்கள் வழிநடத்த சூரியமண்டலம் சந்திரமண்டல் முதலியவை எல்லாங்கடந்து விரஜாநதியில் முழுகித் தெளிவிசும்பாகிய தேசவிசேஷத்திற் புகுந்துபின் இங்கு வாராமல் நிரதிசயவின்பத்தை அநுபவிக்கிறுனென்று கூறியதற்கேற்ப ஈண்டுத் திருவள்ளுவரும் மோக்ஷத்தைப் 'புக்கில்' என்ருர். 'பின்புறப்படாதுபுக்கேவிடுமில்' என்று பரிமேலழகர் உரைத்தவுரையும் இங்கறியத்தக்கதே. ஜீவன் வீட்டுலகில் ஒரு நிலைமையனுய் நிரதிசயவின்பத்தை அநுபவிக்கின்ருனென்பதை 'பேராவியற்கை' என்றதனுல் விளக்கினுர். மோக்ஷ லோகம் ஊர்த்துவகதியிலுள்ளதாம் என்பதை 'வானம்' 'மேனுலகம்' என்ற பெயர்களால் குறிப்பிட்டார். இந்த வீட்டுலகைக்காட்டிலும் சிறந்தது பிறிதொன்றில்லை யென்பதை 'வரனென்னும்வைப்பு' என்பதனுலும், 'வானோர்க்குயர்ந்தவுலகம்' என்பதனுலும் தெரிவித்தார். இங்கு மற்றச் சமயவாதியர் கூறுகிறபடி ஜீவன் பிர்ம்மத்துடன் இரண்டறக்கலந்துவிடுகிறது என்பது முதலிய குறிப்புகள் ஒன்றேனுமின்றித் திருமால் சமயச்சார்பினர்கள் ஒப்புக்கொண்டபடி மோக்ஷத்தைச் சிறந்ததொரு தேசவிசேஷமாகவே திருவள்ளுவர் குறிப்பிட்டனராதலால் இவர் செங்கண்மாலுலகத்தையே மோக்ஷமாகக் கொண்டுள்ளாரென்று துணியலாம்.

இனி, அர்த்தவாதமென்னும் தாத்பர்யலிங்க முரைக்கப்பெறும்.— திருவள்ளுவர் தாம் முடிபாகக்கொண்ட செங்கண்மாலுலகாகிய வீட்டுலகத்தை அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் "சிறப்பீனும்" என்றதனுலும், மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் "சிறப்பெனுஞ் செம்பொருள்" என்றதனுலும் சிறப்பென்ற சொல்லால் புகழ்ந்துரைத்தார். இந்த மோக்ஷமாகிய உறுதிப்பொருள் ஏனைய உறுதிப்பொருள்போலில்லாது அழிவற்றதாயும் நிரதிசயவின்பத்தையுடையதாயுமிருப்பதால் இங்ஙனம் கூறினுர்.

திருவள்ளுவர் மோக்ஷத்தைக்குறித்துத் தனியே ஒரு அதிகாரத்தினுல் விளக்காததினுல் அது உத்தமப்பிரமாணமாகிய வேதத்

தால் அறியத்தக்கதென்பது விளங்கும். இதனால் அபூர்வதையென்ற தாத்பர்யலிங்கம் பெறப்பட்டது. "சிறப்பெனும், செம்பொருள் காண்பதறிவு" என்றதனால் மோக்ஷத்தை, மெய்யுணர்வின் பிரயோஜனமாகக் கூறினர். இதனால் பலம் என்ற தாத்பர்யலிங்கமும் பெறப்பட்டது.

திருவள்ளுவர் சமய உண்மையை அறிதற்கு முதலில் மோக்ஷ விஷயத்தில் அவர் கருத்தின்னதென்று தெரிந்துகொண்டு அதன் பிறகு அறுவகைத் தாத்பர்யலிங்கங்களால் ஆராயவேண்டுமென்று முன்புரைத்துக்கொண்டதற்கேற்ப இதுவரை முறைபிறழாது ஆராயலாயிற்று. திருவள்ளுவர் முன்னர் மோக்ஷத்தைச் சிறந்ததோர் தேச விசேஷமாகப் பொதுப்படக்கூறி, இறுதிப்பாலில் செங்கண்மாலுலகென்று சிறப்பித்துரைத்து, அதைப் பலவிடங்களிலுமெடுத்தாண்டு அதற்கு ஊகத்தாலறியும்படி உபபத்தியும் அபூர்வதையும் அர்த்தவாதமும் பலமுமுரைத்தார். ஆதலால் திருவள்ளுவர் திருமால் சமயச்சார்பினரே என்பது துணிபு.

இதுவரை திருவள்ளுவரின் வாய்மொழியான் அவரது சமய உண்மை தெரிவிக்கலாயிற்று. இனி, இவருரைத்த திருக்குறளின் சொற்பொருட்டொடர்கள் ஆழ்வார்களருளிய திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களின் சொற்பொருள்களோடு ஒற்றுமையுடையனவாயிருக்குமென்பது அடுத்த சஞ்சிகையில் ஆராய்ந்துரைக்கப் பெறும்.

ப. அ.

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான்
ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(119-ம் பக்கத் தொடர்ச்சி.)

யமதருமன் பிரஹ்மவித்தையை உபதேசிப்பதற்கு ஒரு சிஷ்யனும் கிடைக்கவில்லையே என்று விசனித்துக்கொண்டிருந்தகாலத்தில் வாயிற்காப்பாளனாகிய சுமுகன் அவ்விடம் வந்து தருமனை வணங்கிநின்று வாயிலில் ஒரு முனிவர் வந்துள்ளார் என்று தெரிவித்தான்.

யமதருமன்—அப்படியானால் அம்முனிவரை இங்கு அழைத்துவா.

சுமு— அப்படியே அழைத்து வருகிறேன்.

முனிவர்—உள்ளே போகலாமா?

சுமு— எங்கள் மஹாராஜா தேவரீரை அழைத்து வரும்படி கட்டளையிட்டார்.

முனி—அப்படியா செல்வோம்.

(உள்ளே செல்லுதல்.)

முனிவர் நாரதபகவானாகவிருக்கக்கண்டு யமதருமன் சிம்மாசனம் விட்டிறங்கி நல்வரவுகூறி ஆசனத்திலமரச்செய்து அர்க்ய பாத்யாதிகளால் உபசரித்தான். பிறகு முனிவரை நோக்கி ஸ்வாமி! யாது காரணம்பற்றி இங்கு விஜயஞ்செய்தீர்கள்? யாதொரு காரணமின்றி ஓரிடத்திற்கும் செல்லமாட்டீர்களன்றோ! அங்ஙனமிருக்க இங்குத் தேவரீர் எழுந்தருளியதற்கு என்னுடைய சம்பந்தமும் சிறிதிருத்தல்வேண்டுமென்று கருதுகிறேன்.

நார— சில முக்ய கார்யத்தைத்தெரிவிப்பதற்கும் உம்மோடு கலந்து பேசிக்கொள்வதற்கும் இங்கு வந்தேன். பிர்ம்மதேவன்

தங்கள் மனத்திலுள்ள கவலையை ஒழிக்கத் தங்களை அங்கு வரும்படி சொல்வதற்கு என்னை யனுப்பினர்.

தர்ம— பெரியோர்களுடைய தரிசனத்தால் நன்மையுண்டாகுமென்பதைப் பிரத்யக்ஷமாக அறிந்து கொண்டேன். தேவரீருடைய நல்வரவினல் அடியேனுக்குள்ள பெருங்கவலையகன்றதற்கு மிகவும் மகிழ்வடைகிறேன். பிர்ம்மதேவன் அடியேனை வரும்படி கட்டளையிட்டதனல் அடியேன் கருதியதும் அவசியமாய் முற்றுப்பெறுமென்றே நம்புகிறேன். இதுநிற்க; இப்பொழுது தேவரீருடைய பூரண க்ருபைக்கும் பாத்ரபூதனுப் விட்டேன். எனக்கு இனி என்ன குறையுண்டு.

நார— உம்மிடத்தில் தெரிவிக்கவேண்டிய காரியமும் முடிந்துவிட்டது. எனக்கும் பூலோகத்தில் அவசர காரியமிருப்பதால் சென்று வருகிறேன்.

தர்ம— (மந்திரியாகிய சுமதியைப்பார்த்து) மந்திரி! நான் நாரதரை எந்த க்ஷணத்திற் கண்டேனே அதுமுதல் எனக்கு மிகுந்த உத்ஸாகமுண்டாகிறது. இதனல் யாது விளையுமோ? ஒன்றுந்தெரியவில்லை. நாரதர் எங்குச்சென்றாலும் கலகம் விளையுமென்று உலகத்தில் வதந்தி பரவுகிறது. அப்படியிருந்த போதிலும் முடிவில் அவருடைய வரவு நல்லோருக்கு நன்மையை யுண்டுபண்ணும். இது விஷயத்தைப் பாரத முதலான நூல்களாலும் நேரில்கண்டதினுலும் தெரிந்திருக்கிறோம். இதுநிற்க; பிர்ம்மதேவன் ஆஜ்ஞைபிட்டிருக்கின்றனராதலால் யான் விரைவில் சத்யலோகஞ்சென்று வருகிறேன். நான் வருமளவும் நீர் இங்கிருந்து பூலோகத்திலிருந்துவரும் ஜீவர்களை அவரவர்கட்குத் தகுதியான தண்டனைவிதித்துக் கார்யங்களைச் செவ்வனே நடத்திக்கொண்டு வருவீராக.

சும— மஹாராஜ! தங்களுடைய கட்டளையின்படி என்னுலியன்ற மட்டிலும் இவ்விடத்திலுள்ள இராஜகார்யங்களைச் செவ்வனே பார்த்துவருகிறேன்.

தர்ம— இனி நான் ஒருகவலையின்றிச் சென்றுவருகிறேன்.

சும— மஹாராஜ! சுகமாய்ச் சென்றுவருவீராக.

(யமதருமன் சத்யலோகஞ்செல்லுதல்.)

இஃதிங்ஙனமிருக்க; தகப்பனாரின் உத்தரவுபெற்று வைவசுத பட்டினத்தை நோக்கி வருகின்ற நசிகேதஸ் நாரதபகவானைக்கண்டு இவர் சிறந்த முனிவராகத் தோன்றுகின்றார்; இவரிடத்திலும் வைவசுதபட்டினத்தின் மார்க்கத்தை நன்கு கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று அவரை நோக்கி ஸ்வாமி! அடியேன் தேவரீரிடத்தில் ஒன்று கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்; அநுமதித்தருளவேண்டும்.

நார— அப்பா! நீ யார்? உன்னைப்பார்த்தால் ருஷிசிரேஷ்டரின் புதல்வனாகத் தோன்றுகிறது. ஏதோ ஒரு முக்யகார்யத்தை முன்னிட்டுச் செல்வதாகவும் தெரிகிறது. உன்னுடைய முகத்தைப் பார்க்கும்போது இதற்குமுன் எனக்கும் உனக்கும் யாதொரு சம்பந்தமில்லாதிருந்தும் அன்பு அதிகரிக்கிறது. உலகில் சில பொருள்களைக்கண்டவிடத்துச் சில வஸ்துக்களுக்கு இயல்பாகவே விருப்பு வெறுப்புக்களுண்டாகின்றன. இவற்றுக்கு *வெளிப்படையானகாரணம் இன்னவென்று ஆராய்வதற்கு முடியவில்லையன்றோ! மேலும் உனக்கெவ்விதத்திலாவது ஓர் உபகாரஞ் செய்யவேண்டு

* வெளிப்டையான காரணமறியப்படாமையைக்குறித்து "𑌵𑍍𑌯𑌤𑌿𑌷𑌜𑌤𑌿 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌃 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌹𑍇𑌤𑍁𑌃, 𑌨 𑌖𑌲𑍁 𑌬𑌹𑌿𑌰𑍁𑌪𑌾𑌧𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑍀𑌤𑌯𑌃 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌵𑌿𑌕𑌸𑌤𑌿 𑌹𑌿 𑌪𑌤𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑍋𑌦𑌯𑍇 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂, 𑌦𑍍𑌰𑌵𑌤𑌿 𑌚 𑌹𑌿𑌮𑌰𑌶𑍍𑌮𑌾𑌵𑍁𑌦𑍍𑌗𑌤𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌾𑌨𑍍𑌤𑌃" என்று சொல்லப்பட்டுளது. இதன் பொருளாவது அளவற்ற யோசனைக்கப்பாலுதிக்கும் சூரியனைக்கண்டு பூலோகத்தில் எவ்விடத்திலோவிருக்கும் ஓர் தடாகத்திலுள்ள தாமரைப்புஷ்பங்கள் மலர்கின்றன. இவ்விதமே சந்திரனைக்கண்டமாத்திரத்தில் சந்திரகாந்தக்கற்கள் மகிழ்ச்சியுற்று ஜலத்தைப் பெருக்குகின்றன. இவை ஒன்றுக்கொன்று இன்ன சம்பந்தத்தால் இச்செயலைச் செய்கின்றனவென்று வெளிப்படையான காரணமறியப்பட மாட்டா என்பதாம்.

மென்ற எண்ணமுண்டாகிறது. ஆதலால் நீ எதைக்கேட்க விரும்புகின்றனையோ அதைக்கேட்பாய்.

நசி— ஸ்வாமி! அடியேனுடைய ஸௌஹ்ருத விசேஷத்தால் தேவரீருடைய தரிசனங்கிடைத்தது. இதுவே அடியேன் உத்தேசித்துச்செல்லுகிற காரியம் கைகூடுமென்பதற்கு அறிகுறியாகவிருக்கிறது. தேவரீர்போல்வாரின் அநுக்ரஹத்தைப் பெற்றவர்கள் கருதிய பயனை யடையாதொழிவர்களோ? தேவரீருடைய யோகமஹிமையால் அடியேனுடைய விருத்தாந்தமெல்லா மறிந்துகொள்ளக்கூடும். ஆயினும் அடியேன் தெரிவித்துக்கொள்ளவேண்டிய கடமையைமுன்னிட்டு இவ்விடத்தில் விண்ணப்பித்துக்கொள்கிறேன். அடியேனுடைய தகப்பனார் வாஜச்ரவஸ் என்பவர் விசுவஜித் என்ற யாகம் செய்யத்தொடங்கி அது பூர்த்தியுற்றபிறகு தமக்குள்ள பொருள்களைத் தானஞ்செய்துகொண்டு வருகிற முறையில் அடியேனையும் யமதருமராஜனுக்குத் தக்ஷிணையாகக் கொடுத்தார். ஆதலால் இப்பொழுது யமதர்மராஜனுடைய பட்டினமாகிய வைவசுதபட்டினத்தை நோக்கிச் செல்கின்றேன். இங்ஙனம் செல்கின்ற அந்த மார்க்கத்தின் விவரத்தையும், அடியேனுக்கு வேண்டிய நன்மைகளையும் உபதேசித்தருளவேண்டும்.

நார— ஹே நசிகேதஸ்ஸே! முன்னொரு காலத்தில் உத்தானபாதரென்ற அரசரின் புதல்வனான ஐந்து வயதுள்ள துருவனென்பவன் தன் மாற்றாந்தாயின் வார்த்தையினால் புண்பட்ட மனத்தையுடையவனாய் வனஞ்சென்று அங்கு என்னைச்சந்தித்தான். அப்பொழுது என்னுடைய உபதேசத்தைக்கேட்டு பெறுதற்கரிய தபசைச்செய்து அவன் தேவர்களாலும் மஹருஷிகளாலும் அடையமுடியாத உன்னதமான பதவியை அடைந்து சிரஞ்சீவியாக இருக்கின்றானன்றோ! மேலும் சூரியகுலத்தில் அவதரித்த இராமபிரான் தன் தந்தையாரின் ஆக்ஞையால் தண்டகாரண்யமடைந்து அங்குள்ள கொடிய அரக்கர்களையழித்து அதனால் சிறந்த

கீர்த்தியை அடைந்தானன்றோ! அதுபோல நீயும் உன் தகப்பனாரின் ஆக்ஞையை உல்லங்கனஞ் செய்யாமல் யமதருமராஜனுடைய அநுக்ரஹத்தைப்பெற்று கீர்த்தியை யடையப்போகின்றாய். இஃதல்லாமலும் சம்சாரத்திற்கிடந்துழல்கிற ஜீவாத்மாக்கள் உயர்ந்த பதவியை யடைந்து உஜ்ஜீவிப்பதற்கு உன்னால் ஒருபாயம் ஏற்படப்போகிறது. இதுநிற்க; முன்னதாக உனக்குச் சில எச்சரிக்கை செய்கிறேன்.

நசி— ஸ்வாமி! அருளிச்செய்யவேண்டும்.

நார— தர்மராஜன் உன்னைப் பரீக்ஷிப்பதற்காக ஐஹிகமான சுகங்களைக்காட்டி அந்தச் சுகங்களை அநுபவிப்பாயென்று கேட்பான். அவை ஒன்றும் வேண்டாவென்று சொல்லி மோக்ஷமடைதற்குரிய உபாயத்தை மறந்துவிடாமல் கேட்பாய். இனி என் யோகமஹிமையால் உன்னை யமதருமனுடைய அரமனையடையும்படி செய்கிறேன்.

நசி— அப்படியே அநுக்ரஹிக்கவேண்டும்.

நாரதர் நசிகேதஸ்ஸுக்கு அநுக்ரஹித்துவிட்டுத் தாம் ஸத்ய லோகத்தை நோக்கிப் புறப்படுங்காலையில் பலவாறு யோஜிக்கத் தொடங்கினர். அவை வருமாறு:— தர்மராஜன் நம் தகப்பனாராகிய பிர்ம்மாவைப் பார்ப்பதற்காகச் சென்றிருக்கிறான்; நசிகேதஸ் தர்மராஜனுடைய அரமனையில் மூன்று நாள் காத்துக்கொண்டிருக்கும் வரை பிர்ம்மதேவன் அவனை அவ்விடத்திற்கு அனுப்பமாட்டார்; அந்த மூன்று தினங்கள் வரை நசிகேதஸ் அவ்விடத்திற் பட்டினி கிடக்கும்படிநேரும்; அதுவும் மேல்நடக்கப்போகின்ற காரியத்திற்கு அநுகூலமாகவே இருக்கும்; உபவாஸத்தால் சரீரம் சிறுக்குமாகில் சீக்கிரம் வித்யாப்பிராப்தி ஏற்படுமல்லவா! பிர்ம்மவித்தையை யடைவதற்கு இவ்வளவு மாத்திரமாவது சாதனமில்லாவிடில் அது எவ்வாறு ஸித்திக்கும்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(114-ம் பக்கத்தொடர்ச்சி.)

2-வது கண்டம்.

பிருந்தாவனம்.

യോ ഗോപയതി ഗോപാലാൻ സ്നേഹവാത്സല്യ സംയുതേ।
സംരക്ഷണായ പൂർണ്ണായ തസ്മൈ ഗോപാലാത്മനേ നമഃ॥

1-வது அதிகாரம்.

(யதுவம்சம்.)

பூரூரவஸின் புதல்வன் ஆயுவின் கதையை நாம் முதலாவது குறித்துள்ளோம். யஜுர்வேதத்தில் ஆயுஸ் என்றால் யஜ்ஞத்தில் பிரயோஜனப்படுகிற நெய்யின் பெயர். ஆனால் ருக்வேதஸம்ஹிதை 10-வது மண்டலத்தில் ஆயுஸ் என்ற வோரரசனிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயுஸ் என்கிற அரசனின் புதல்வன நகுஷன். நகுஷனின் தனயன் யயாதி. நகுஷனுடையவும் யயாதியினுடையவும் பெயர்கள் ருக்வேதஸம்ஹிதையிலும் காணப்படுகின்றன. யயாதிக்கு ஐந்து மைந்தர்கள் என்று இதிகாசபுராணங்களில் கூறப்பட்டிருக்கிறது. மூத்தவன் யது. இளையோன் பூரு. இவர்களுக்கிடையில் மூவர்களின் பெயர்கள் துர்வசு, துருஹ்யு, அனு இவர்களின் பெயரும் ருக்வேதத்தில் காணப்படுகிறது. இவர்கள் உடன்பிறந்தவர்களோ அல்லது வெவ்வேறானவர்களோவென்று ருக்வேதத்தில் சொல்லப்படவில்லை.

யயாதியின் பிள்ளைகளில் மூத்த நால்வரும் தங்கள் தந்தை சொற்படி நடவாததால் அவர் அவர்களைச் சபித்துக்கடையோனை

பூருவிற்கே ராஜ்யமளித்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. பூருவின் வம்சத்தில் துஷ்யந்தன், பரதன், அஜமீடன் முதலிய வரசர்கள் பிறந்தார்கள்.

துரியோதனன் யுதிஷ்ட்டிரர் முதலிய கௌரவர் இப்பூருவின் வம்சத்தினர். இவ்விதமே கிருஷ்ணன் முதலிய யாதவர்கள் யதுவின் வம்சத்தினர். யயாதி புத்திரனன யதுவிடமிருந்தே மதுராவாசிகளான யாதவர்களுண்டானர்களென்று புராண இதிகாசங்கள் சொல்லிவருகின்றன. ஆனல் ஹரிவம்சத்தில் வேறோர் கதை காணப்படுகிறது. ஹரிவம்சபர்வத்தில் யதுவம்சத்தைப்பற்றிச் சொல்லுங்கால் யயாதி புத்திரனகிய யதுவையே குறித்து விஸ்தரித்திருக்கிறது. ஆனல் விஷ்ணுபர்வத்தில் வேறுவிதமாகக் காணப்படுகிறது. இக்ஷ்வாகுவம்சத்தவனன ஹர்யச்வன் என்போன் அயோத்தியில் அரசாண்டுவந்தான். அவன் மதுவனாதிபதியான மதுவின் மகள் மதுமதியை மணம்புரிந்துகொண்டான். அம்மதுவனமே மதுரையென்பது. எக்காரணத்தினலே ஹர்யச்வன் அயோத்தியை விட்டுத்துறத்தப்பட்டு தன்மாமனகிய மதுவின் நகரமான மதுரையில் சிலகாலம் வசித்துவந்தான். இவன் புதல்வனை யதுவென்பவன் ஹர்யச்வன் லோகாந்தரம் அடைந்தபின் யதுவானவன் மதுரைக்கு அரசனனன். யதுவின் மைந்தன் மாதவன். மாதவனின் புதல்வன் ஸத்வதன். ஸத்வதனின் புத்திரன் பீமன். மதுவின் பிள்ளையான லவணனை ஸ்ரீராமனின் இளையோன் சத்ருக்கன் யுத்தத்தில் ஜயித்து ராஜ்யத்தைக்கைப்பற்றி மதுராநகரத்தை நிர்மாணஞ்செய்தான். ராகவர்கள் மதுரையைவிட்டு வெளியேறியபின் பீமன் அந்நகரில் மறுபடியும் அரசுசெய்துவந்தான். இந்த யதுவினல் பிறந்த யதுவம்சமே மதுராவாஸிகளான யாதவகணம்.

ருக்வேதஸம்ஹிதை பத்தாவது மண்டலம் 62-வது சூக்தத்தில் "யது, துர்வா, (துர்வசு) இந்த இருவர்களின் பெயரும் காணப்படுகிறது. ஆனல் இவர்கள் தாஸ ஜாதிகளின் அரசர்களென்று கூறப்பட்டுளது.

மறுபடியும் இம்மண்டலம் 49-வது சூக்தத்தில் இவ்விருவர்களும் பலவான்களென்று பெருமைப்படுத்தினேம் என்றும் சொல்

லப்பட்டுளது. மேற்கூறியதிலிருந்து இந்த யது சூர்யனு? அல்லது அநார்யனுவென்று நிச்சயமாய்ச்சொல்ல வியலவில்லை. மறுபடியும் முதலாவது மண்டலம் 37-வது சூக்தத்தில் தூர்வசு யது வென்ற இரண்டு உக்ரதேவதைகளையும் தூரத்திலிருந்தோ நாம் அக்னி மூலமாய் ஆஹ்வாநம் செய்வோம் என்றுமிருக்கிறது. அநார்யராஜர்களாயிருந்தால் அவர்களைக்குறித்து ஆரியருஷிகள் இவ்விதம் கூறியிருப்பார்களா?

அது எவ்விதமிருப்பினும் இருக்கட்டும். மூன்று யதுக்களைக் குறித்து பிரஸ்தாபங்களை நாம் காண்கின்றோம். 1 யயாதி புத்திரன் 2. இக்ஷ்வாகு வம்சத்தோன், 3. அநார்யராஜா.

ஸ்ரீ கிருஷ்ணன் எந்த யதுவமிசத்தில் பிறந்தாரென்பது நிச்சயிக்க முடியாதகாரியம். ஸ்ரீ கிருஷ்ணன் எந்த யதுவின் வமிசத்தில் அவதரித்தாரோ அவ்வமிசத்திலேயே மது பேரனுன முதலான வாசர்கள் உதித்தார்கள். இவர்களே மதுரையிலிருந்தனர். ஸ்ரீகிருஷ்ணன் விருஷ்ணி வம்சத்தோன் கம்சனும் தேவகியும் போஜவம்சத்தவர்கள். கம்சனுக்கும் தேவகிக்கும் ஒரே பிதா மகன்.

2-வது அதிகாரம்.

ஸ்ரீ கிருஷ்ணனின் அவதாரம்.

கம்சனின் தந்தையான உக்கிரசேனனென்கிற வாசன் யாதவர்களின் தலைவனென வருணிக்கப்பட்டிருக்கிறது. வசுதேவர் ஸ்ரீ தேவகியின் கணவனும் ஸ்ரீகிருஷ்ணனின் பிதாவுமாவார்.

வசுதேவர் தேவகியை மணம்புரிந்து மனைவியுடன் கிருகத்திற்குப் புறப்படுங்கால் கம்சன் அன்பு பாராட்டி அவர்களின் ரதத்திற்குத் தானே தேர்ப்பாகனுயிருந்து தேரை நடாத்தி வந்தான். அச்சமயத்தில் தேவகியின் 8-வது கர்ப்பத்திலுதிக்கும் புதல்வன் கம்சனை வதைப்பானென்று ஆகாயவாணி உண்டாகியது. உடனே இவ்வாபத்தினின்றும் தப்புவதினிமித்தம் தேவகியைக் கொல்ல கம்சன் எத்தனித்தான். அப்பொழுது வசுதேவர் கம்சனைச் சாந்தப்படுத்தும்பொருட்டுத் தன் மனைவி பெறுகிற பிள்ளைகளையெல்லாம்

தானே கம்சனிடம் ஒப்புவித்துவிடுவதாக வாக்களித்தார். இதனால் தேவகியின் உயிர் தப்பியது. ஆனால் தேவகியையும், வசுதேவரை யும் கம்சன் சிறையிலடைத்துவிட்டான். அவர்களின் முதலாறு குழந்தைகளையும் கம்சன் முறையே வதைத்து விட்டான். ஏழா வது கர்ப்பம் சிதைந்து விட்டது. மகாவிஷ்ணுவின் ஆணைப்படி யோகநித்திரை அவ்வேழாவது கர்ப்பத்தை ஆகர்ஷணம்செய்து வசு தேவரின் வேறு மனைவியான ரோகிணியின் கர்ப்பத்தில் ஸ்தாபித்த தென்று புராணங்கள் கூறுகின்றன.

மதுரையின் சமீபத்தில் இடைச்சேரியில் நந்தகோபனின் வாசம். அவன் வசுதேவரின் நண்பன். ரோகிணியை நந்தன் கிரு ஹத்தில் வசிக்கும்படி வசுதேவர் ஏற்பாடு செய்திருந்தார். அவ் விடத்தில் ரோகிணி ஒரு புதல்வனைப் பெற்றாள். அப்புதல்வனே பலராமன். தேவகியின் 8-வது கர்ப்பத்திலிருந்து ஸ்ரீ கிருஷ்ணன் உதித்தார். பூமியிலவதரித்த இரவிலேயே அவரை வசுதேவர் எடுத் துக்கொண்டுபோய் நந்தன் வீட்டில் விட்டுவிட்டார். அக்காலத்தில் மகவை யீன்றிருந்த நந்தன் மனைவியாகிய அசோதையானவள் யோகநித்ரையால் மயங்கிக்கிடந்தகாலத்தில் வசுதேவன் அம்மகவை யெடுத்துக்கொண்டு தன் குழந்தையான கிருஷ்ணனை சூதிகாக்ரகத் தில் வைத்துவிட்டுத் தன் வீடு திரும்பி எடுத்துவந்த பெண் குழந் தையைத் தன் குழந்தையெனக் கம்சனிடம் ஒப்புவித்தார். ஆனால் அக்குழந்தையை வதைக்கக் கம்சனால் கூடவில்லை. யோகநித்திரை யாகிய அக்குழந்தை ஆகாய வழியாகச் செல்லுங்கால் 'உன்னைக் கொல்லுகிறவன் வேறிடம் இருக்கிறான்' என்றுசொல்லி மறைந்தது. அதன்பிறகு தனது தங்கையைச் சிறையிலிருந்து விடுவித்தான். ஸ்ரீ கிருஷ்ணன் நந்தன் வீட்டில் வளர்ந்துவந்தானென்று புராணங் கள் கூறுகின்றன.

இக்கதைகள் எளிதில நம்பமுடியாதவைகள். நாம் முன்பு எடுத்துக்கொண்ட நியமப்பிரகாரம் இவைகளைத் தள்ளிவிடுவோம். இவைகளிலிருந்து, ஸ்ரீகிருஷ்ணன் மதுரையின யதுவம்சத்தோன், தேவகியின் கர்ப்பத்தில் வசுதேவருக்குப் பிறந்தவனென்றும் இளமைப் பருவத்திலேயே குழந்தையை நந்தன் வீட்டில் விட்டு விட்டாரென்றும் இம்மாத்திரம் கிரகித்துக்கொள்வோம்.

அச்சமயத்தில் கம்சன் அதிகமாகக் கொடுமையையும் துராசாரத்தையும் செய்துவந்தானென்றும், தனது தகப்பனாகிய உக்கிரசேனனை சிங்காசனத்திலிருந்து கீழே தள்ளித் தானே அரசுரிமை பெற்றானென்றும் பாகவதத்திலும் பாரதத்திலும் சொல்லியிருக்கின்றன. அவன் யாதவன். ஜனங்களிடத்தில் அதிகக்கொடுமை பாராட்டினனாகையால் அவர்கள் அவ்வூரைவிட்டகன்று அன்னிய நாட்டில் புகுந்துகொண்டனர். வசுதேவர் தன் மனைவியான ரோகிணியையும் அவள் புதல்வனையும் நந்தன் வீட்டில் வைத்திருந்தார். இவ்வாறே ஸ்ரீ கிருஷ்ணனையும் நந்தன் வீட்டில் ஒளித்து வைத்திருந்தார். இம்மட்டும் நாம் சரித்திரத்தை ஒப்புக்கொள்வோம்.

தொடரும்.

ஸ்ரீ:

மணக்கால்நம்பியும், ஆளவந்தாரும்.

மணக்கால்நம்பி உய்யக்கொண்டாரின் உத்தம சிஷ்யர்களுள் முக்யராவார். இளையபெருமாள் (லக்ஷ்மணன்) ஸ்ரீராமபிரானுக்கு எல்லாப் பணிவிடைகளையும் அவருடன் கூடியிருந்துகந்துசெய்தது போல இவரும் உய்யக்கொண்டாருக்குப் பன்னிரண்டாண்டுகள் பணிவிடைசெய்துகொண்டிருக்கையில் உய்யக்கொண்டார்தேவிகளாகிய ஆண்டாள் திருநாட்டுக்கெழுந்தருளினார். அதன்பிறகு இவரே உய்யக்கொண்டாரின் திருமாளிகைக் கைங்கர்யமெல்லாம் குறைவறச் செய்துவந்தார். ஒருநாள் உய்யக்கொண்டாரின் புதல்விகளாகிய இரண்டு பெண்பிள்ளைகளை நீராட்டி அழைத்துக்கொண்டு வருகிற வழியில் வாய்க்கால் சேறாகவிருக்கக்கண்டு அவர்கள் திகைப்புற்று நின்றார்கள். அப்பொழுது மணக்கால்நம்பி அங்கச் சேற்றில் படியாய்க்கிடந்து அவர்களை தம் முதுகிலே அடியிட்டெழுந்தருள்வித்துக்கொண்டு சென்றார்.

இது செய்தியை உய்யக்கொண்டார் கேட்டருளி 'இவருடைய அன்பின் மிகுதியை என்னென்பேம்' என்று மகிழ்ச்சியுற்று அவரைத் தம்மருகில் அழைத்து தம் திருவடித்தாமரையை அவர் சிரசில் வைத்து "'இனி உமக்குச்செய்யவேண்டியதென்ன?' என்று வினவினர். மணக்கால்நம்பி "உற்றேனுகந்துபணிசெய்துனபாதம், பெற்றேன் ஈதேயின்னம் வேண்டுவதெந்தாய்" என்று தேவரீர் திருவடிகளையே எப்பொழுதும் தரிசனம் செய்துகொண்டிருக்கும்படி கிருபை செய்தருளவேண்டும் என்றார். உய்யக்கொண்டார் சிறந்த வைபவத்தையுடைய † த்வயமந்திரத்தை மறுமுறையும் உபதேசித்தருளினர்.

இவ்வாறு மணக்கால்நம்பி தம்மாசார்யரிடத்தில் பேரன்புடன் கைங்கர்யஞ் செய்துவருகிறகாலத்தில் உய்யக்கொண்டார் திருநாட்டிற்கெழுந்தருளும் சந்தர்ப்பம் வந்துற்றது. அதுசமயம் மணக்கால் நம்பி உய்யக்கொண்டாரை நோக்கி ஸ்வாமி! இனி நமது ஸித்தாந்தத்தை விர்த்திசெய்யத் தக்கவர் யாவர் என்று கேட்டார். உய்யக்கொண்டார் நீரே நமது ஸித்தாந்தத்தை நிர்வஹிக்கக் கடவீர்; பின் நம்மாசார்யராகிய நாதமுனிகளின் திருக்குமாரரான ஈசுவர

---

† த்வயமந்திரம் மிகவும் சிறந்த வைபவத்தையுடையது. இதன் பெருமையை "𑌅𑌤𑍀𑌤𑌾𑌨𑌾𑌗𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌂। 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 ‖ 𑌮𑌾𑌨𑌸𑌂 𑌵𑌾𑌚𑌿𑌕𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌕𑌾𑌯𑌿𑌕𑌂𑌚 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾𑌕𑍃𑌤𑌂। 𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌮𑌰𑌣𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨𑌾𑌶𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 ‖" "அதீதா நாகதஜ்ஞானம் ஆத்மதத்வ ப்ரகாசகம், ஸர்வ வேதார்த்த விஜ்ஞானம் ஸர்வ சாஸ்த்ரார்த்த தர்சநம், மாநஸம் வாசிகம் பாபம் காயிகஞ்ச த்ரிதாக்ருதம், த்வயஸ்மரணமாத்ரேண நாசம்யாதி ஸுநிச்சிதம்" என்ற ப்ரமாணங்களால் அறியலாம். இதன் பொருளாவது.— த்வயமந்திரமானது கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் அறிவிக்கும்; ஜீவாத்மா பரமாத்மாக்களின் உண்மையை விளங்கச்செய்யும்; எல்லா வேதங்களின் பொருளைத்தெரிந் துணரச்செய்யும்; எல்லாச் சாஸ்திரங்களின் அர்த்தங்களை அறிவிக்கும்; மனதினால் கருதியதும் வாயினலுரைத்ததும் சரீரத்தினற் செய்ததுமாகிய மூன்றுவிதமான பாபங்கள் இந்த மந்திரத்தை நினைத்த மாத்திரத்தினல் நாசமடையும்; இது நிச்சயம் என்பதாம்.

முனிகளுக்கு ஒரு திருக்குமாரர் அவதரிக்கப்போகின்றார்; அவருக்கு யமுனைத்துறைவரென்று திருநாமம் சாத்திவித்து அவருக்கு நமது ஸித்தாந்தத்தின் ரஹஸ்யார்த்தங்களை உபதேசிப்பீர்; இது, நாதமுனிகள் அடியேனுக்கு நியமித்ததாகும்; இக்கைங்கர்யத்தை அடியேன் செய்யும் பாக்யம் பெற்றிலேன்; நீர் எங்ஙனமாகிலும் அவரை வசப்படுத்தி உபதேசிக்கக் கடவீர்; என்று நியமித்துவிட்டு நாதமுனிகளின் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு திருநாட்டிற் கெழுந்தருளினார்.

அதன்பிறகு மணக்கால்நம்பி முதலான முக்ய சிஷ்யர்கள் மனந்தளர்வுற்று ஒருவாற்றால்தேறி உய்யக்கொண்டாரை * பிர்ம்ம மேதத்தாலே ஸம்ஸ்கரித்துத் திருப்பள்ளி படுத்தினார்கள்.

பின்பு மணக்கால்நம்பி தம் ஆசார்யரின் நியமனப்படி ஸித்தாந்தத்தின் உண்மைப் பொருள்களைப் பலருக்கும் உபதேசித்து ஸித்தாந்தம் விர்த்தியடையும்படிசெய்துவந்தார் இவ்வாறு நடைபெற்று வருகிறகாலத்தில் நாதமுனிகளின் திருக்குமாரரான ஈசுவரமுனிகளுக்கு ஆடி மாதத்தில் உத்திராட நக்ஷத்திரத்தில் ஒரு குமாரர் அவதரித்தார். இது செய்திகேட்ட மணக்கால்நம்பி மிகவும் களிப்புடையவராய் ஈசுவரமுனிகள் திருமாளிகைக்கெழுந்தருளி அவர் திருக்குமாரருக்குத் § திருவிலச்சினைசெய்து † யமுனைத்துறைவன் என்று திருநாமஞ் சாத்தினார்

ஈசுவரமுனிகளும் யமுனைத்துறைவரை மிகவும் பிரியமாக வளர்த்து வந்தார். அவரும் அறிவிற்சிறந்தவராய் விளங்கி மகா பாஷ்யப்பட்டருடன் சாஸ்திராப்யாசம் செய்துகொண்டிருந்தகாலத்

---

* பிர்ம்மமேதம்—பிரம்மயாகம். அஃதாவது பரப்பிர்ம்மத்தை ஆராதிப்பதுபோல் திருநாட்டுக்கெழுந்தருளிய பெரியோர்களின் திருமேனியை ஆராதிப்பதாம்.

§ திருவிலச்சினை—அழகிய அடையாளம், (சங்கு சக்கரங்களைத் தோள்களில் தரித்தல்.)

† யமுனைத்துறைவன்—கண்ணபிரான். "தூயபெருநீர்யமுனைத்துறைவனை" என்பதனாலு மறியலாம்.

தில் இவர் இராஜபுரோகிதனுஞ் சிறந்த வித்வானுகவுமிருந்த ஆக்கியாழ்வான் என்ற வித்வஜனகோலாகலனை ஜெயித்து அரசனுல் தரப்பெற்ற பாதிராஜ்யத்தைப்பெற்று, இராஜாவின் மனைவியால் மகிழ்ந்து சூட்டப்பெற்ற ஆளவந்தார் என்ற பெயரையுமுடையவராய்ச் சுகமாக வாழ்ந்துவந்தார்.

இவர் இங்ஙனமிருப்பதைக் கேள்வியுற்ற மணக்கால்நம்பி மகிழ்ச்சியுடையவராய் ஆளவந்தாரைப் பார்ப்பதற்கு ஆளவந்தாரிருக்கின்ற அரமனைவாயிலையடைந்து உள்ளேபிரவேசிக்க முயன்றார். அப்பொழுது வாயிற்காப்பாளர்கள் தடைசெய்தார்கள். மணக்கால் நம்பி 'இஃதென்ன? ஆளவந்தாருக்கு இராஜ்யபதவி வந்தெய்தியதனுலன்றோ இவ்வளவு கட்டுக்காவலுண்டாயிற்று. இனி என் செய்வது' என்று ஆலோசித்து ஆளவந்தாருக்குத் திருப் ¶ போனகம் சமைக்கின்ற ஸ்ரீ வைஷ்ணவர்களைப்பார்த்து 'ஆளவந்தார் எந்த வஸ்துவை விரும்பி அமுது செய்வார்?' என்று கேட்டார். அவர்கள், தூதுளங்கீரையை விரும்பி அமுது செய்வார் என்று கூறினுர்கள். அதைக்கேட்ட மணக்கால்நம்பி அன்றுமுதல் ஆறு மாதம்வரைத் தூதுளங்கீரையை மடைப்பள்ளிக்காரரிடங் கொடுத்துவந்தார்.

அதன்மேலும் மணக்கால்நம்பிகள் ஆளவந்தாரை நேரில் காணமுடியாமைக்கு மனவருத்தமுற்று நான்குதினம்வரைத் தூதுளங்கீரையைக்கொண்டு கொடுக்காமலிருந்தார். இஃதிங்ஙனமிருக்க; ஆளவந்தார் அமுது செய்யும்போது மடைப்பள்ளிப் பணியாளரை நோக்கி 'நாலைந்து நாட்களாகத் தூதுளங்கீரையின்றிக்கே யிருக்கக் காரணமென்ன?' என்று வினவினர். அவர்கள், ஒரு வயோதிகப் பிராம்மணர் நெடுநாட்களாக நாடோறும் தவறாது கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தார்; இந்த நாலைந்து தினங்கள் மாத்திரம் அவர்கொடுக்கவில்லை, காரணம் யாதோ? அறிகிலோம் என்றூர்கள். இதைக்கேட்ட ஆளவந்தார் இனி அவர் இங்கு வருவாராகில் நமக்கறிவிப்பீராகவென்று அவர்களை நோக்கிக் கூறினுர்.

இஃதிங்ஙனம்நிகழ, மணக்கால்நம்பி இன்னமும் பார்ப்போம் என்று தூதுளங்கீரையைக்கொண்டு சென்று மடைப்பள்ளிப் பணி

¶ போனகம்—அன்னம்.

யாளரிடம் கொடுத்தார். அவர்கள் இவர் வந்த செய்தியை ஆளவந்தாருக்கறிவித்தனர். ஆளவந்தார் அவரை இங்கு அழைத்துவாருங்களென்று கட்டளையிட்டனர். அவர்களும் அவ்வாறே அவரை அழைத்துச் சென்றனர். அப்பொழுது ஆளவந்தார் அவரைக்கண்டு * முகமன்கூறி ஆசனமிட்டு இதில் எழுந்தருளியிருக்கவேண்டும் என்று வேண்டினார். அவரும் அவ்வாறே எழுந்தருளியிருந்தார்.

ஆளவந்தார் அவரைநோக்கி நீர் நெடுநாளாக நமக்குத் தூதுளங்கீரை கொண்டுவந்து கொடுப்பதற்குக் காரணமென்ன? உமக்குப் பொருள்வேண்டுமா? பூமிவேண்டுமா? என்று கேட்டார். நம்பிகள் நமக்கிவை ஒன்றும் வேண்டா; உம்முடைய பூர்வர்கள் தேடின பொருளிருக்கிறது; அந்தப் பொருளிருக்கிறவிடமும் யானறிவேன்; அதை நீர் கைக்கொள்ளும்வரையில் நான் தினந்தோறும் தடையின்றி வந்துபோவதற்கு வாயிற்காப்பாளருக்கு அநுமதி செய்ய வேண்டும்; என்றனர். ஆளவந்தாரும் வாயிற்காப்பாளருக்கு அவ்வாறே கட்டளையிட்டார்.

மணக்கால்நம்பியும் ஆளவந்தாருக்குக் † கீதையின் செம்மைப் பொருள் தெரியும்படி பதினெட்டு அத்ப்பாயத்தையும் முறைபாக அருளிச்செய்தார். வேதசாரமான கீதைபினுட்பொருளைக்கேட்டு பரமாத்மாவைப் பற்றவேண்டுமென்ற ஆர்த்தி அதிகரித்து நம்பிகளைப்பார்த்து 'ஸ்வாமி! அவ்வஸ்துவை நேரில் காணுதற்குரிய

---

* முகமன்—உபசாரவார்த்தை.

† இங்கு மணக்கால்நம்பி ஆளவந்தாருக்கு முதலில் கீதையை உபதேசிப்பதற்குக் காரணம் யாதெனின்; ஆளவந்தார் ராஜபோகத்தை அநுபவித்து அதுவே சாசுவதமென்ற உணர்ச்சியுற்று வாழ்நாளைக்கழித்துவந்தார். இங்ஙனமிருக்கின்ற இவருக்கு ராஜைசுவர்யத்தில் அநித்யபுத்தியும், அதிற்பற்றறுதலுமுண்டாகிப் பின்பு இவர் பரமாத்மாவே உபாயமாவான் என்று பற்றுதற்கு முதலில் கீதையை உபதேசித்தார். இதனால் கீதையின் செம்பொருளுணர்ச்சியுண்டானல் மற்றப் பொருள்களிடத்திலுள்ள பற்றுதல் தன்னடையே அகன்றுவிடுமென்பது தெளிவு. கீதையில், அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி "ஸ்வாமி! நான் தேவரீருடைய சிஷ்யனாகவிருக்கிறேன்; எனக்குத் தர்மாதர்மமின்னதென்று நன்ருய்த் தெரியவில்லை; இந்த உணர்ச்சியை தேவரீரே அடியேனுக்கு உபதேசிக்கவேண்டும்" என்று வேண்டி நின்றான்.

உபாயமில்லையோ' என்று கேட்டார். நம்பியும், அந்த வஸ்துவை நேரிற் காணுதற்குரிய உபாயமிருக்கிறது என்று அவரையழைத்துச் சிறந்த சரமசுலோகார்த்தத்தை ¶ ஏகாந்தமாக அருளிச்செய்தார். இந்த மெய்மைப் பெருவார்த்தையை ஆளவந்தார் கேட்டு நெல்லுக் குப்பால் கட்டக் கட்டத் தலைவணங்குவதுபோல ராஜாங்கவிஷயத்தி லுள்ள கௌரவபுத்தி யகன்று அதில் ஆசையற்று பகவத்விஷயத் தில் அன்புமிக்கவராயிருந்தார். இவருக்கு இந்நிலைமை யுண்டாகி யதைக்கண்ட நம்பி மிகவும் மகிழ்வுடையவராய் இனிமேல் இவருக்கு நாம் செய்யத்தக்கது என்னவென்று ஆலோசித்து ஆளவந்தாரை நோக்கி உம்முடைய முன்னோர்களின் பொருள் என் கைவசமுள தென்றுரைத்தேனே; அதை நீர் பெற்றுக்கொள்ள வேண்டாமா? என்று கேட்டார்.

ஆளவந்தார் ஸ்வாமி! அந்தச் சொத்து எது? எவ்விடத்தி லுள்ளது? அது தேவரீர் கைவசமிருப்பதற்குக் காரணமென்ன? என்றுவினவினர். நம்பிகள் 'அப்பொருளாவது இதற்குமேல் சிறந்த

அப்பொழுது கண்ணபிரான் முதலில் சரீரம் வேறு ஆத்மா வேறு என்ற உணர்ச்சியைப்பிறப்பித்து, கர்மயோகத்தைவிதித்து, இந்தக்கர்மத்தை காம்ய புத்தியைவிட்டு அநுஷ்டிப்பாய் என்றுரைத்துப் பின்பு ஆத்மஜ்ஞானத்தை உண்டாக்கி, அதன்மேல் ஈசுவரஜ்ஞானத்தைப் பிறப்பித்து, இடைவிடாது செலுத்துகின்ற பக்தியை வெளியிட்டான். இதைக்கேட்ட அர்ஜுனன் மிகவும் கவலையுற்று இந்தக் கர்மயோகாதிகளை யநுஷ்டித்து அதனால் பாபத்தை ஒழித்துப் பரமாத்மாவைப் பற்றுதல் மிகவும் அருமையன்றோ! என்று சோகித்தான். இங்ஙனம் சோகித்த இவனது நிலைமைகண்ட கண்ண பிரான் அர்ஜுன! நீ இப்படி வருந்தவேண்டா. மற்றெல்லாம்விட்டு என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று; இவ்வாறு பற்றுவாயாகில் உன்னைப் பாபங் களினின்றும் விடுவிக்கிறேன்; இனி ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்; என்று அருளிச்செய்தான். இதனால் கீதையின் பொருள் நெஞ்சிற்படுமாகில் இதர விஷயங்களில் பற்றொழிந்து ஈசுவரனே உபாயமாவானென்ற உணர்ச்சி யுண்டாகும்.

¶ ஸ்ரீ உடையவர் திருக்கோஷ்டியூர்நம்பிகளிடத்தில் பதினெண்முறை அலைந்து மிகவும் அருமையாகப்பெற்றனர். ஆதலால் இந்த அர்த்தம் மிகவும் ரஹஸ்யமானதாகும். இதன்பெருமையறிந்தே மணக்கால்நம்பிகள் ஆளவந் தாருக்கு இதை ஏகாந்தமாக அருளிச்செய்தாரென்று சொல்லப்பட்டுளது.

தொரு பொருளில்லை யென்று சொல்லத்தக்க ஒப்புயர்வற்ற பொருளாம்; அந்தப் பொருள் சமீபமாயிருப்பதோர் சிறந்தவிடத்திலிருக்கிறது; உம்முடைய முன்னோர்களின் அநுக்ரஹத்திற்கு யான் பாத்திரபூதனுயிருந்தேனுகலால் அந்தப் பொருள் என் கைவசப்பட்டிருக்கிறது; இனி, இது உமது கைவசம்புகுமேல் உமக்கு யாது குறைவுளது?' என்றனர்.

இதைக்கேட்ட ஆளவந்தார், 'ஸ்வாமி! அப்பொருள் ஒப்புயர்வற்றதாயும், சிறந்தவிடத்திலிருப்பதாயும், தேவரீர் கைவசமுற்றதாயுமிருக்குமாகில் அத்தகையபொருளை அடியேனுக்குக்காட்டியருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார். மணக்கால்நம்பி * "நவஜ்ஞாநஸ்ய ஸங்கொசஃ நவெவ யமகொசரஃ, தஸ்மாசு ரங்கம் ஊஹாவுண்யம் கொநஸெவெத வுஜிமாநு" "நசஜ்ஞாநஸ்ய ஸங்கோச: நசைவ யமகோசர:, தஸ்மாத் ரங்கம் மஹா புண்யம் கோநஸேவேத புத்திமாந்" என்ற பெருமையுடைய திருவரங்கமென்ற க்ஷேத்திரத்திற்கு ஆளவந்தாரை யழைத்துச்சென்று பெரியபெருமாளைக்காட்டி உம்முடைய முன்னோர்கள் தேடிவைத்த † மஹாநிதி இதுவே யாகும் என்றார்

---

* இந்தச் சுலோகம் ஸ்ரீரங்கமாஹாத்மியத்திற் சொல்லப்பட்டுளது. இதன்பொருளாவது.— எந்த க்ஷேத்திரத்தில் ஞானத்தினுடைய குறைவு உண்டாகிறதில்லையோ எமனுக்கு வசப்படுதலுமில்லையோ ஆகையால் மிகவும் நல்வினையை விளைக்கிற அப்படிப்பட்ட ஸ்ரீரங்கத்தை நல்லபுத்தியையுடைய எவன்தான் அடையான்; என்பதாம்.

† ஸஹஸ்ரநாமத்தில் எம்பெருமானுக்கு நிதியென்று மொருபெயருண்டென்றுசொல்லப்பட்டுளது. நிதியின் (பொருளின்) தன்மை எம்பெருமானுக்கிருப்பதைக்குறித்துத் திருமங்கைமன்னனும் திருக்குறுந்தாண்டகத்தில் 'நிதியினை' என்றருளிச்செய்தார். இதற்குப் பெரியவாச்சான்பிள்ளையருளிய வியாக்யானமும் இங்கறியத்தக்கதே. அதுவருமாறு:— "நிதியினை" எய்ப்பினில் வைப்பாய் இந்நிதியுடையவனுக்கு மிடிபடவேண்டாதிருக்கையும், உடையவன் காலிலே எல்லாரும்வந்து விழுகையும், உண்டென உயிர் நிற்கையும், ஆபத்துக்குதவுகையும், உடையவன் பெருமதிப்பனுகையும், விற்று ஒற்றி வைத்து ஜீவிக்கலாயிருக்கையும், இப்படிச்செய்ததென்று ஏசாதிருக்கையும் ஏவமாதி குணங்களைப்பற்ற 'நிதியினை' என்றார். 'வைத்தமாநிதியிறே'

ஆளவந்தாரும் பெரியபெருமாளுடைய § முடிவில்லதோர் எழில் நீலமேனியைச் சேவித்து * "பழுதேபலபகலும் போயின வென்றஞ்சி, யழுதேன் அரவணை மேற்கண்டு-தொழுதேன்" என்கிற படியே கீழ்க்கழிந்த நாளுக்கிரங்கிக் கண்ணுங்கண்ணீருமாய்அரங்கத்

"குஹாயாம் நிஹிதம்" என்று பேசப்படுகிற வஸ்து. 'நிதியினை' நாட்டிற் காண்கிற நிதிபோலல்ல, எல்லாவற்றிற்கும் மேலான நிதியாயிற்று இந்நிதி; இந்நிதிபுஸதைத்துவைத்து ஆளவேண்டா; நெஞ்சிலேவைத்தாளலாம். ஓரிடத்திலே புதைத்துவைத்துத் தேசாந்திரத்தில் நிற்கச்செய்தே விநியோகங் கொள்ளவேண்டினால் உதவாது அந்நிதி; இந்நிதி, நினைத்தவிடத்தே விநியோகம் கொள்ளலாம்; இந்நிதி, பறித்துக்கொள்வாரில்லை; பறிக்கத்தானெண்ணுது; அந்நிதியுடையவனை அவசரம் பார்த்துக்கொன்று பறித்துக்கொண்டு போவார்கள்; இந்நிதியுடையவனுக்கு அப்படிப்பட்ட ப்ரமாதஸம்பாவனைகளில்லை" என்பதாம்.

§ லோகசாரங்கமாமுனிவர் பெரியபெருமாளுடைய நியமனத்தால் திருப்பாணாழ்வாரை எழுந்தருளச்செய்துகொண்டு பெரியபெருமாள் திருமுன்புகொணர்ந்து சேர்த்தார். அப்பொழுது பெரியபெருமாள் தன் அப்ராகிருத திருமேனியின் எழிலைத் திருப்பாணாழ்வாருக்குத் தரிசனந்தந்தருள அதைக்கண்டு "ஆலமாமரத்தி னிலைமே லொருபாலகனாய், ஞாலமேழுமுண்டானரங்கத் தாவினணையான், கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோ ரெழில், நீலமேனியையோ நிறைகொண்ட தென்னெஞ்சினையே" என்று அருளிச்செய்தார். அதுபோல இங்கு மணக்கால்நம்பிகள் மிகவும் கிருபையோடு ஆளவந்தாருக்குப் பெரியபெருமாளைக்காட்டினாராதலால் பெரியபெருமாளும் ஆளவந்தாரை ஈடுபடுத்தத் தன் திருமேனியின் எழிலைத் தரிசனதர அதைக்கண்டு ஈடுபட்டார்.

* "பழுதேபலபகலும்போயினவென்றஞ்சி
அழுதேனரவணைமேல்கண்டு—தொழுதேன்
கடலோதம்காலலைப்பக்கண்வளரும்செங்கண்
அடலோதவண்ணரடி"

என்ற இந்தப்பாசுரம், பகவத் விஷயத்தில் காலத்தைப் போக்காமல் வீணாகக்கழிந்த நாளைக்குறித்து இரங்கியதாகப் பொய்கையாழ்வாரால் அருளிச்செய்யப்பட்டது.

தம்மானை அநுபவித்து † "பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம், துறந்தார் தொழுதார் அத்தோள்" என்றும், % "𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌧𑌨𑌾𑌨𑌿 𑌨𑌾𑌥 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌃 𑌪𑌶𑌵𑍋 𑌗𑍃𑌹𑌾𑌣𑌿, 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦 𑌪𑌦𑍍𑌮 𑌪𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍𑌮 𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌰𑍂𑌪𑌾𑌃" "க்ஷேத்ராணி மித்ராணி த்நாநி நாத புத்ராச்ச தாரா: பசவோக்ருஹாணி, த்வத்பாதபத்ம ப்ரவணாத்ம விருத்தே: பவந்தி ஸர்வே ப்ரதிகூலரூபா:" என்றும் சொல்லுகிற பிரதிகூலங்களை அறவே ஒழித்து உத்தமாசிரமமாகிய சந்யாசியாசிரமத்தைக் கைக்கொண்டனர். அன்றுமுதல் ஆளவந்தார், "அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக், கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்று பாண்பெருமான் ஈடுபட்டதுபோல திருவரங்கனை யொழிய பிறிதொன்றையு மறியாதவராய்க் காலத்தைக் கழித்து வந்தார். அப்பொழுது பெரியநம்பி, திருக்கோஷ்டியூர்நம்பி, பெரிய திருமலைநம்பி, மாறனேரிநம்பி, திருக்கச்சிநம்பி, ஆளவந்தாராழ்வான், திருமாலையாண்டான், வானமாமலையாண்டான், ஜீயராண்டான், திருக்குருகூரப்பன், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றான், தெய்வப்பெருமாள், வகுளாபரணஸோமயாஜியார், திருக்குருகூர்தாஸர்,

---

† "நினைப்பன்திருமாலைநீண்டதோள்காண
நினைப்பார்பிறப்பொன்றும்நோார்—மனைப்பால்
பிறந்தார்பிறந்தெய்தும்பேரின்பமெல்லாம்
துறந்தார்தொழுதாரத்தோள்"

என்ற இது, பூதத்தாழ்வாரால் அருளிச்செய்யப்பட்டது. இதன்பொருளாவது. இன்பமிக்க திருத்தோள்களைக் காணுவதற்கு அடியேன் திருமாலை நினையாநிற்பேன். அவ்வாறு நினைப்பவர் மீண்டும் பிறவார். அப்படி அத்தோள்களைத் தொழுதவர்கள் உலகவின்பங்களைமுற்றும் துறந்தவர்களேயாதலால்; என்பதாம்.

% இந்தச்சுலோகம் ஹஸ்திகிரி மாஹாத்மியத்தில் பிர்ம்மாவால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டுளது. இதன்பொருளாவது.— லோகநாதனே! பூமிகளும், தோழர்களும், பொருள்களும், புத்திரர்களும், மனைவியரும், பசுக்களும், வீடுகளும், என்ற இவை எல்லாம் தேவரீருடைய திருவடித்தாமரைகளிலே நிலைகொண்டமனத்தின் வியாபாரமுடைய அடியேனுக்குப் பிரிதிகூலங்களாக ஆகின்றன; என்பதாம்.

திருமாலிருஞ்சோலைதாஸர், வடமதுரைப்பிறந்தான், ஆட்கொண்டியம்மங்கி, என்ற இருபதுபேர்களும் ஆளவந்தார் திருவடிகளை ஆசிரயித்தார்கள்.

இவர்களனைவரும். சிறந்த வித்வான்களாய் ஸித்தாந்தத்தை நிர்வஹித்துக்கொண்டிருந்த காலத்தில் மணக்கால்நம்பி ஆளவந்தாரைநோக்கி 'இன்னமொரு ரஹஸ்யவிசேஷம் குருகைகாவலப்பன் பக்கலிலேயுண்டு; அவர்பாற் சென்று கேட்பீர்; என்றருளிச்செய்தார். ஆளவந்தார் நம்பிகளைநோக்கி 'இஃதென்ன? தேவரீருக்கு அந்த ரஹஸ்யம் தெரியாதொழிவதற்குக் காரணம் யாது?' என்று வினவினர். நம்பிகளும், 'உம்முடைய திருப்பாட்டனரான நாதமுனிகள் எங்களாசார்யரான உய்யக்கொண்டாருக்கு அந்த ரஹஸ்ய விசேஷத்தை உபதேசிக்க முயன்றகாலத்தில் அவரும் ¶ 'பிணங்கிடக்க மணம்புணரலாமோ? சரீரமுடியப்போகிற தருவாயில் அதை அப்யஸித்துக்கொண்டால் போதுமானது' என்று விண்ணப்பஞ்செய்தார். அதன்பிறகு எங்களாசார்யரான உய்யக்கொண்டாருக்கு அந்த ரஹஸ்யத்தைக் கேட்டுக்கொள்ளும் சந்தர்ப்பம் நேரவில்லை; அதனால் அந்த ரஹஸ்யம் எமக்குந் தெரியாதொழிந்தது என்றார்.

இதைக்கேட்ட ஆளவந்தார் அந்த ரகஸ்யத்தைக் குருகை காவலப்பன் சந்நிதியிற்சென்று கேட்கவேண்டுமென்ற அவா அதிகரித்துத் தம் சிஷ்யர்களுடன் குருகைகாவலப்பன் யோகஞ்செய்துகொண்டிருக்கிற விடத்தை அடைந்தனர். அங்குக் குருகைகாவலப்பன் யோகஞ்செய்துகொண்டிருந்தார். இவரை யோகபங்கஞ்

¶ பிணங்கிடக்க மணம் புணரலாமோ என்பது பிணங்கிடக்கிறவிடத்தில் கல்யாணஞ்செய்யலாகாதென்றவாறு. இதன் கருத்து யாதெனின்; உலகில் சம்சாரிகளாய்ப் பகவத்விஷயஜ்ஞான மற்றுப் பிணப்பிராயராய்க் கிடக்கிற தசையில் அவர்கட்குப் பகவத்விஷயஜ்ஞானத்தைப் பிறப்பித்து உய்விக்கும் வழியைத்தேடாமல் அடியேன் மாத்திரம் இந்த யோகரகஸ்யத்தைக்கேட்டு வாழ்வதால் யாதுபயன் என்பதாம். ;தனால் வைஷ்ணவனுக்குப் பரஸம்ருத்தியே பிரயோஜனமாகவிருக்குமென்பதும், பகவத்விஷயஜ்ஞானமில்லாதவர்கள் மனிதரேயாயினும் அவர்கள் பிணப்பிராயராவர் என்பதும் பெறப்படுகின்றன.

செய்யலாகாதென்ற கருத்துடன் மதிற்புறத்தே தெரியாதுநின்றார். அங்கு யோகத்திலிருந்த குருகைகாவலப்பன் பின்னே திரும்பிப் பார்த்து 'இங்கே சொட்டைக்குலத்தினர் யாரேனும் வந்த துண்டோ' என்று கேட்டார். அப்பொழுது ஆள்வந்தாரும் 'அடியேன் யமுனைத்துறைவன் விடைகொண்டிருக்கிறேன்' என்று குருகைகாவலப்பன் திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பித்து 'ஸ்வாமி! அடியோங்கள் மதிற்புறத்தே தெரியாதபடி நின்றோம்; அங்ஙனமிருக்கத்தேவரீர் சொட்டைக்குலத்தினர் இங்கு வந்ததுண்டோ என்று எவ்வாறு தெரிந்தருளிச்செய்தீர்' என்று கேட்டார். அப்பொழுது குருகைகாவலப்பன் ஆளவந்தாரைநோக்கி அடியேனும் எம்பெருமானும் அனுபவிக்கின்றகாலத்தில் பெரியபிராட்டியார் எம்பெருமானை அணைத்துக்கொண்டாலும், அப்பிராட்டியாரின் முகத்தையுங்கூட எறிட்டுப்பார்க்காதவன் இப்பொழுது என் தோள்களையமுக்கி மூன்று நான்குமுறை இந்த மதிற்புறத்தை யெட்டிப் பார்த்தான். இப்படியவன் பார்த்ததால் சொட்டைக்குலத்திற் பிறந்தார் இங்கு வந்திருத்தல்வேண்டுமென்று தீர்மானித்தேன்; என்றார்.

இதைக்கேட்ட ஆளவந்தார் மிகவும் களிப்புடையவராய் 'அடியேனுக்கும் இந்த யோக ரஹஸ்யத்தை உபதேசித்தருளவேண்டும்' என்று அவரது திருவடிகளில் விழுந்துகிடந்தார். அப்பனும் உகந்து 'அப்படியே செய்கிறோம்' என்று ஆளவந்தாரின் முடிபிடித்தெடுத்து 'நம்முடைய சரீரவியோககாலத்தில் உமக்கு இந்த ரஹஸ்யத்தைச் சொல்லுகிறோம்; வருகிற புஷ்பமாதத்தில் குருபுஷ்ப யோகத்தில் நடுப்பகற்பொழுதில் நமக்குச் சரீரவியோகம் நேரும்; அதற்கு முன்பாகவே நீர் இங்கெழுந்தருளவேண்டும்' என்று திருமுகமெழுதிக்கொடுத்தார். ஆளவந்தாரும் அந்தத் திருமுகத்தைப் பெற்றுத் தம் சிஷ்யர்களுடன் ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருளினார்.